பக்கங்கள் 19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 04 ஞாயிற்றுக்கிழமை 20.07.2025 | அதிர்வு 350

## கோர விபத்தில் மூவர் மரணம்!

வான் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கண்டி, உடுதும்பர – மீமுரே பகுதியில் நேற்று 02 ▶





# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் தப்பவே முடியாது!

## சகலருக்கும் தண்டனை உறுதி என்று நீதி அமைச்சர் தெரிவிப்பு

"உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் எவரும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது. இந்தச்சம்பவத்துடன்தொடர்புடைய சகலருக்கும் தண்டனை கிடைத்தே தீரும்."

- இவ்வாறு நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் 02 ▶

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம்:

# பொலிஸ் சேவையிலிருந்து நிலந்த ஜெயவர்தன நீக்கம்!

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்களை அறிந்திருந்தும் அவற்றை மறைத்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்ட முன்னாள் அரச புலனாய்வுத் துறையின் தலைவர் நிலந்த ஜெயவர்தன பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தீர்மானத்தை பொலிஸ் ஆணைக்குழு எடுத்துள்ளது.

நிலந்த ஜெயவர்தனவைப் பணி நீக்கம் செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்கும் பணிப்புரையைப் பொலிஸ் ஆணைக்குழு, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு அனுப்பியுள்ளது.



நிலந்த ஜெயவர்தன தனது கடமையைப் புறக்கணித்தார் எனவும், குற்றவியல் குற்றத்தைச் செய்தார் எனவும் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டு வெடிப்புகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைத்திருந்தது.

அதன்படி, நிலந்த ஜெயவர்தன மீது ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு, அவர் செய்த குற்றச் செயலுக்காக வழக்குத் தொடரப்பட வேண்டும் என்று பொலிஸ் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 02 ▶




தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒன்றாக இயங்கிய காலத்தில் அதற்கு ஆதரவாகக் கனடா, பிரிட்டன் போன்ற இடங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக் கிளைகள் அல்லது ஆதரவு அணிகள் இயங்கியமை தெரிந்த விடயம்தான்.

இப்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் லண்டனில் தங்கி இருக்கும் சமயத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவு அணி ஒன்று அங்கு கட்சியின் செயலாளரைச் சந்தித்து கட்சிக்கு ஆதரவான கட்டமைப்பு ஒன்று லண்டனில் செயல்படுவது பற்றி அவரோடு நேற்று கலந்துரையாடி இருக்கின்றது.

முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் லண்டன் 02 ▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஈஸ்டர் தாக்குதல்...**

தொடர்பான விசாரணைகள் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இது தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி. கொலைக் குற்றவாளிகள், இலஞ்ச, ஊழல் மோசடியாளர்கள் எவரும் தப்பவே முடியாது. அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள்.

அந்தவகையில் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் எவரும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகள் தொடர்கின்றன. இதன் போது புதிய தகவல்களும் வெளிவருகின்றன.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சகலருக்கும் தண்டனை கிடைத்தே தீரும்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய எவரையும் எமது அரசு பாதுகாக்காது. இந்தத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது ஆட்சியில் நீதி கிடைத்தே தீரும்." – என்றார்.

**கோர விபத்தில்...**

இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களில் இரண்டு பெண்களும் மற்றும் ஆண் ஒருவரும் அடங்குகின்றனர் என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த மேலும் மூவர் தெல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**இரகசியம் பரகசியம்...**

பிரிவை இயக்கியவர் சட்டத்தரணி இரட்ணசிங்கம். அவரின் லண்டன் ஈலிங் இல்லத்தில் நேற்று இந்தக் கூட்டம் நடைபெற்றது.



இலங்கைத் தமிழரசுக் கட்சி இலங்கைக்குள் இயங்கும் கட்டமைப்பு. அதற்கு வெளிநாட்டில் எந்தக் கிளைகளும் இல்லை. கிளைகள் வெளிநாட்டில் இயங்க முடியாது. ஆயினும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவான குழுக்கள் செயற்பட முடியும் என்ற பின்புலத்தை நேற்றைய கூட்டத்தில் தமிழரசுக் கட்சியினுடைய பொதுச் செயலாளர் சுமந்திரன் தெளிவுபடுத்தினார் என அறிய வந்தது.

தமிழரசுக் கட்சியின் லண்டன் ஆதரவு அணி சம்பிரதாயபூர்வமாக நேற்றைய சந்திப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் அழைப்பாளராக விசித்தரன் செயல்படுவார் என நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகவும் அறியவந்தது.

இந்தக் கூட்டத்தை முன்னெடுத்த சட்டத்தரணி இரட்ணசிங்கம் தமிழரசுக் கட்சியின் நீண்ட கால உறுப்பினர். கட்சியோடு சேர்ந்து செயல்படுபவர்.

கட்சியின் ஆதரவு அணி ஒன்றும் லண்டனில் கட்டமைக்கப்பட்டு இயங்குவது வரவேற்கத்தக்கது. ஆயினும் அது கட்சியின் கிளை அல்ல என்பதை சுமந்திரன் தெளிவுபடுத்த, கூட்டத்தில் பங்குபற்றியவர்கள் அதனை ஏற்றுக்கொண்டு அதன்படி செயல்பட இணங்கினர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி நாட்டில் திறமையாக இயங்குவதற்கு தன்னால் வழங்கக்கூடிய முழு ஒத்துழைப்பையும் இந்த ஆதரவு அணி ஆற்றும் என நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகவும் அறிய வந்தது.

எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சிக்கு வலிமையான ஆதரவை லண்டனில் இருந்து பெற்றுக் கொடுப்பது இந்த குழுவின் நோக்கமாக இருக்கும் எனத் தெரிகிறது.

* * *

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் குறித்தும் அவர்களின் செயற்பாடுகள், நடவடிக்கைகள், பெறுபேறுகள் போன்றவை பற்றியும் பல்வேறு தகவல்களை வெளியிடும் ஓர் இணையத்தளம், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு அளித்த வாக்குறுதிகள் மற்றும் அவற்றில் நிறைவேற்றப்பட்டவை பற்றிய விடயங்களை ஒட்டி ஒரு புள்ளிவிவர தகவலை வெளியிட்டது.

வெரிட்டே ரிசேர்ச் என்ற அமைப்பே இது பற்றிய ஆய்வை நடத்தி இருக்கின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் 2024 ஜனாதிபதித் தேர்தல் கொள்கை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள வாக்குறுதிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் ஓர் ஒன்லைன் கருவியான 'அனுர மீட்டர்' மூலம் வெரிட்டே ரிசேர்ச் இந்த விடயத்தை வெளியிட்டது.

தேர்தல் காலத்தில் ஜனாதிபதி 22 முக்கிய வாக்குறுதிகளை அளித்துள்ளார். அவற்றில் ஒன்று மட்டுமே இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ளது என்று அந்த ஆய்வு சுட்டிக்காட்டியது. சம்பாதித்தவுடன் செலுத்த வேண்டிய வரியின் திருத்தமே நிறைவேற்றப்பட்ட வாக்குறுதியாகும்.

22 வாக்குறுதிகளில் நிறைவேற்றப்பட்டவை ஆக ஐந்தே ஐந்து வீதம்தான். இந்த 22 வாக்குறுதிகளில் 35 வீதம் பகுதியளவு நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் 14 வீதம் தொடங்கப்பட்டுள்ளது. இருப்பினும், 22 வாக்குறுதிகளில் 10 அல்லது 45 வீதம் குறித்து புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் எதுவும் இல்லை என்றும் அது கூறுகிறது.

இதுதான் அநுர அரசின் சீத்துவம்....!

# முன்னாள் எம்.பிக்களுக்குரிய ஓய்வூதியம் விரைவில் இரத்து!

## அமைச்சர் சந்திரசேகர் தகவல்



"முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதிகளுக்குரிய ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்குரிய சட்டமூலம் வெகுவிரைவில் நிறைவேற்றப்படும்" - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கண்டி மற்றும் கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகைகள் தவிர ஏனைய அனைத்து ஜனாதிபதி மாளிகைகளும் நாடு மற்றும் நாட்டு மக்களின் நலன்களுக்காகச் சிறந்த முதலீட்டுத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படவுள்ளன என்றும் அவர் கூறினார்.

அமைச்சர் நேற்றுமுன்தினம் நெடுந்தீவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். மக்கள் அமைப்புகள் மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடி, அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

நெடுந்தீவுப் பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் அவர் விளக்கமளித்தார்.

அதன்பின்னர் மக்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர்,

"தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் ஊழல்வாதிகள் மற்றும் மோசடியாளர்கள் தப்பவே முடியாது. ஊழல் அரசியல் கலாசாரத்துக்கு முடிவு கட்டவே நாம் ஆட்சிக்கு வந்தோம். அதற்கே மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அதற்கமைய ஊழல்களில் ஈடுபட்ட மோசடியாளர்கள் தற்போது சட்டத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளனர்.

நாம் சட்ட விவகாரத்தில் தலையிடவில்லை. சட்டம் தனக்குரிய வகையில் தனது கடமையை நிறைவேற்றும்.

அதேபோல் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் நிச்சயம் கட்டம், கட்டமாக நிறைவேற்றுவோம். இது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. ஐந்தாண்டு காலப் பகுதிக்குள் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை ஒரே இரவில் நிறைவேற்றி விட வேண்டும் எனச் சிலர் நினைக்கின்றனர். அது தவறு.

அதேவேளை, வறுமையின் கோரப் பிடிக்குள் இருந்து மக்களை மீட்பதற்காக சமூக சக்தி வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அரசியல், பொருளாதார மற்றும் சமூக மேம்பாடே எமது இலக்கு. அந்த சமூக மேம்பாட்டுத் திட்டத்தை வறுமை நிச்சயம் ஒழிக்கப்படும். அதற்குரிய வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன."
- என்றார்.



# இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட அதிக வலு மோ. சைக்கிள்கள் சிக்கின!

(ந.லோகதயாளன்)

புத்தளம், தலவில மற்றும் நாவக்காடு பகுதிகளில் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து நடத்திய சோதனையின்போது இந்தியாவில் இருந்து கடல் வழியாகக் கடத்தி வரப்பட்டன எனக் கூறப்படும் 5 உயர்வலு கொண்ட மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தடை செய்யப்பட்ட 800 மற்றும் 400 எஞ்சின் திறன் கொண்ட நான்கு மோட்டார் சைக்கிள்களும், எந்தவொரு சட்ட ஆவணங்களும் இல்லாமல் மறைத்து வைக்கப்பட்டிருந்த 250 எஞ்சின் திறன் கொண்ட ஒரு மோட்டார் சைக்கிளும் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது 50, 45 மற்றும் 20, 22 வயதுடைய 4 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோட்டார் சைக்கிள்கள் வீடுகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்றும், அவற்றில் சில மோட்டார் சைக்கிள்கள் இரவில் இரகசியமாக ஓட்டிச் செல்லப்பட்டன என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்களுடன் புத்தளம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.








# சுவாமி விபுலாநந்தர் துறவற நூற்றாண்டு விழா நேற்று யாழ்ப்பாணத்தில் கோலாகல ஆரம்பம்

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் துறவற நூற்றாண்டு விழா நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.

புத்தசாசன,மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், அகில இலங்கை இந்து மாமன்றம், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவை இணைந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் துறவற நூற்றாண்டு விழாவை நடத்துகின்றன.

நேற்று மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் ஆரம்பமான நிகழ்வில் பிரதம அதிதியாக கலாநிதி ஜகத் விக்கிரமரட்னவும், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனும் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் திருவுருவப்படத்தினை ஊர்வலமாக எடுத்துச் செல்வதையும், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுவதையும், முதல் நாள் தபால் முத்திரையை யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.










# திருக்கோணேஸ்வரம் மாதுமை அம்பாள் கொடியேற்றம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருக்கோணேஸ்வரம் மாதுமை அம்பாள் ஆடிப்பூர மஹோற்சவ கொடியேற்றம் நேற்று காலை இடம்பெற்றது.

அப்போது எடுக்கப்பட்ட படங்களைக் காண லாம்.







# வவுனியா மாநகர சபையின் முதல்வர் அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுகிறார்

## தொழிலுக்கு இடையூறு செய்கிறார் என சபை உறுப்பினர் குற்றச்சாட்டு




(வவுனியா நிருபர்)

வவுனியா மாநகர சபையின் முதல்வரும், பிரதி முதல்வரும் தனக்கு எதிராக அரசியல் ரீதியான பழிவாங்கலை மேற்கொண்டு தொழில் செய்வதற்கு இடையூறை ஏற்படுத்துகின்றனர் என இலங்கைத் தொழிலாளர் கட்சியின் வவுனியா மாநகர சபை உறுப்பினர் பாருக் பர்ஸ்சான் குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியா மாநகர சபைக்கு உட்பட்ட மாடு அறுக்கும் தொழுவம் தொடர்பாக நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா மாநகர சபையில் முதல்வருக்கு எதிராக வாக்களித்தமையால் எனது தொழில் மீது அரசியல் பழிவாங்கல் மேற்கொள்ளப்படுகின்றது. மாநகர சபைக்குட்பட்ட தாண்டிக்குளம் மாட்டுத் தொழுவத்தின் குத்தகைதாரர் என்ற அடிப்படையில் வருடா வருடம் சபைக்கு செலுத்த வேண்டிய தொகையை உரியவாறு செலுத்தியே வருகின்றேன்.

இந்த நிலையில் சபை ஆரம்பித்து சில நாள்களிலேயே மாநகரசபை உத்தியோகத்தர்களின் பங்களிப்பு இல்லாமல் சபையின் பிரதி முதல்வர் தனிப்பட்ட ரீதியில் மாட்டுத் தொழுவத்திற்குச் சென்று எனக்கு கீழ் பணி புரியும் ஊழியர்களை படம் எடுத்தார். அவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டமையால் தொழில் ரீதியாக பல்வேறு அசௌகரியங்கள் எனக்கு ஏற்பட்டுள்ளன.

மாட்டுத் தொழுவம் தூய்மை இல்லாமல் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். அந்தத் தொழுவம் முற்று முழுதாக மாநகர சபைக்கே உரியது. நாங்கள் அதனை குத்தகைக்கே எடுத்துள்ளோம். எனவே அது தொடர்பான அனைத்து விடயங்களும் மாநகர சபையே செய்து தர வேண்டும்.

தற்போது சபையின் முதல்வர் புதிய ஓர் அறிவிப்பை விடுத்துள்ளார். இங்கிருந்து கொழும்பு உட்பட வெளி மாவட்டங்களுக்கு இறைச்சி கொண்டு செல்லப்படக்கூடாது எனவும், உயிருடன் மாடுகளைக் கொண்டு செல்லக்கூடாது என்றும் அறிவித்துள்ளார். இது தொடர்பாக முதல்வரிடம் கேட்ட போது, “நான் சொல்வது தான் சட்டம். நான் நினைத்தால் தொழுவத்தை திறக்கவும், மூடவும் முடியும்” என்று பொறுப்பில்லாமல் பதில் அளிக்கிறார்.

வெளி மாவட்டங்களுக்கு இறைச்சியை அனுப்பும் போது மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தியே அவற்றை அனுப்புகின்றோம். பராமரிப்பு பணிகளையும் நாங்களே செய்கின்றோம். எனவே எம்மீது ஏற்படுத்தப்படும் இடையூறுகளை அரசியல் பழிவாங்கலாகவே பார்க்க வேண்டியுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவும் சபையின் முதல்வர் மற்றும் சில உறுப்பினர்கள் தொழுவத்தை சென்று பார்வையிட்டுள்ளனர். அதனால் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் உரிய அனுமதியுடன் சென்று பரிசோதியுங்கள். அத்துடன் சென்று பார்வையிடும் நீங்கள் அங்கு இருக்கும் பிழைகளை உடனடியாக செய்து தர வேண்டும். ஆனால் அப்படி செய்வதாகவும் தெரியவில்லை.

வெள்ளி மாலை தொழுவத்தின் மின்சாரம் தடைப்பட்டது. ஆனால் சனி காலை வரை எமக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. இப்படியிருந்தால் நாம் எப்படி தொழில் செய்வது? எனவே எமக்கு நல்ல முடிவைத்தர வேண்டும். இல்லாவிடில் ஒரேயடியாக தொழுவத்தை மூடிவிடுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

முதல்வருக்கும், பிரதி முதல்வருக்கும் ஒரு சில உறுப்பினர்களே அனைத்தும் செய்து கொடுக்கின்றனர். எனது வட்டாரத்தில் நான் மக்களால் தெரிவு செய்யப்பட்டவன். அதே வட்டாரத்தில் தோற்றவர்களும் உள்ளனர். என்னுடைய தொழிலை இல்லாமல் ஆக்குவது என்பது அவர்களது கோரிக்கையாக இருந்தது. அவர்களே இதனை செய்கிறார்களே தவிர, வேறு எந்த உறுப்பினர்களையும் நாம் பிழை சொல்லவில்லை.

சபை முதல்வரின் நல்ல திட்டங்களுக்கு நாங்கள் எப்போதும் ஆதரவு அளிப்போம். ஆனால் நிதானமாக செல்லுமாறு நாங்கள் அவரிடம் கோரிக்கை விடுக்கின்றோம். நாம் தொழுவத்தை குத்தகைக்கே எடுத்துள்ளோம். குத்தகை ஒப்பந்தத்தின் படியே செயற்படுகின்றோம். நாம் இந்த தொழுவம் ஊடாக மாதாந்தம் பல லட்சம் ரூபா நிதியை வரியாக சபைக்கு செலுத்துகின்றோம். இதன் மூலம் சபைக்கு வருடாந்தம் கோடிக்கணக்கில் வருமானம் வருகிறது.

எமது ஒப்பந்த படி எம்மை செயற்பட விட வேண்டும். அல்லது ஒப்பந்தத்தை ரத்து செய்து எமது பணத்தை மீளச் செலுத்த வேண்டும். நான் தொழுவத்தை கைவிடவும் தயார். முதலர்வரின் செயற்பாட்டால் இதில் தொழில் செய்த பலர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாம் தொழிலுக்கு ஆள்களைப் பிடிக்க முடியாதுள்ளது.

அவர்கள் கூறும் குறைகளை மாநகர சபையே செய்து தர வேண்டும். ஆனால் அவர்கள் செய்து தரவில்லை. இது தொடர்பில் நான் கடிதம் ஒன்றையும் வழங்கியுள்ளேன். நாள்கள் பல கடந்தும் அதற்கு இதுவரை பதில் இல்லை. எனவே மாநகர சபை முதல்வர் இது தொடர்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டும். - எனவும் தெரிவித்தார்.

# விசர் நாய்க்கடிக்கான தடுப்பூசிக்கு திருமலை மாவட்டத்தில் தட்டுப்பாடு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் விசர் நாய்க்கடி தடுப்பூசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில்ஏ.ஆர்.வி.என்றுஅழைக்கப்படும் விசர் நாய் கடிக்கான தடுப்பூசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

திருகோணமலை பொது வைத்தியசாலை, கிண்ணியா தள வைத்தியசாலை, மூதூர் தள வைத்தியசாலை மற்றும் கந்தளாய் தள வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளில் தடுப்பூசி இல்லையெனவும் வைத்தியசாலையின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சுற்றுலா பயணிகளே அதிகளவில் நாய் கடிக்கு இலக்கான நிலையில் வருகை தருகின்றனர் எனவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் குச்சவெளி, றொட்டவெவ, புல்மோட்டை.சம்பூர், வெருகல், சேருவிலபோன்றதூர இடங்களில்இருந்து வரும் நோயாளர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையை நம்பி வருகை தந்து மீண்டும் தடுப்பூசி ஏற்ற முடியாமல்வீட்டிற்கு திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் காணி விடயத்துக்கு பொறுப்பான மேலதிக அரச அதிபராக அஜந்தா



கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பதவிக்கு திருமதி அஜிதா பிரதீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நல்லூர் பிரதேச செயலகத்தில் 9 ஆண்டுகள் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடதக்கது.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதிமன்றம் வைத்த குட்டு

கற்றறிந்த பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியில் மிகக் கொடூரமான - குரூரமான - மோசமான - காட்டுமிராண்டித்தனமான - அநாகரிகமான - கேவலமான - பண்பியல்பாகத் தொடரும் 'றாகிங்' சித்திரவதை குறித்து இந்தப் பத்தியில் பல தடவைகள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

இது விடயத்தில் உரிய நடவடிக்கையைத் தீவிரமாக எடுக்க வேண்டிய தரப்புகள் பல தசாப்தங்களாக பொறுப்பின்றி நடந்து வரும் சூழ்நிலையில், இவ்விடயத்தில் உயர் நீதிமன்றமே நேரடியாகத் தலையிட்டிருக்கின்றது.

றாகிங் கொடூரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆகியவற்றின் அலுவலர்களுக்கும், துணைவேந்தர்களுக்கும், பொலிஸாருக்கும் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை முறைகளை முன்னெடுப்பதற்கான வழிகாட்டுதல்களை உயர்நீதிமன்றம் தானே தலையிட்டு வழங்கி இருக்கின்றது. அவை குறித்து உரிய நடவடிக்கை எடுத்து ஆறு மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவும் உயர்நீதிமன்றம் அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

றாகிங் கொடூரத்தில் படுகாயம் அடைந்த ஒரு மாணவன் மற்றும் அவனது சகோதரி ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மீறல் மனுவின் தீர்ப்பின் ஒரு பகுதியாக இந்த கடுமையான வழிகாட்டுதல்கள் அடங்கிய உத்தரவு உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருக்கின்றது.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஷிரான் குணரத்ன, கே. பிரியந்தா பெர்னாண்டோ மற்றும் சோபிதா ராஜகருண ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை வழங்கியிருக்கிறது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, அதன் முன்னாள் - இந்நாள் தலைவர்கள், அனைத்து பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்கள், முன்னாள் கல்வி அமைச்சர், தற்போதைய கல்வி அமைச்சரான பிரதமர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் இந்த வழக்கில் எதிர் மனுதாரர்கள்.

பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்புக்கு உரிய அதிகாரிகள், காவலர்கள், வார்டனங்கள், மார்ஷல்கள் போன்றவர்களை நியமித்தல், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள், மாணவ ஆலோசகர்களின் பங்களிப்பை பெறுதல், சி.சி.ரி.வி. கமராக்களை நிறுவுதல், பொது இடங்களைக் கண்காணித்தல், இரவுப் பார்வைக் கமராக்கள், குரல் பதிவுகள், உடல் கமராக்கள் மற்றும் புலனாய்வு உபகரணங்களை ஊழியர்களுக்கு வழங்குதல், விடுதி வளாகங்களில் நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களை கண்காணித்தல், பல்கலைக்கழகங்கள் மற்றும் விடுதிகளில் மது அருந்துவதைக் கண்டிப்பாக தடை செய்தல், கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவை கொண்ட உள் புலனாய்வு படையை உருவாக்குதல், போதைப் பொருள் தொடர்பான எந்த ஒரு குற்றத்தையும் உடனடியாக கையாளக் கூடியதான ஏற்பாடுகளை தயாராக வைத்திருத்தல், போதைப் பொருள் பாவனை சோதனைகளை தீவிரப்படுத்துதல், றாகிங் கொடூரம் குறித்தும், அதை எதிர்த்துப் போராடுவது குறித்தும் ஒரு பாடத்திட்டத்தை உருவாக்கி அதனை அனைத்து முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் கட்டாயமாக்குதல் என்பன உட்பட பல்வேறு அதிரடி நடவடிக்கைகளுக்கான உத்தரவுகளை உயர்நீதிமன்றம் வழங்கி இருக்கின்றது.

நாட்டின் சட்டவாக்கல் சபையும், அதை நடைமுறைப்படுத்த வேண்டிய நிறைவேற்று அதிகார தரப்பும், அதிகாரிகளும், பல்கலைக்கழகங்களை வழிநடத்தும் கல்விமான்களும் செய்யத் தவறிய பொறுப்புகள் தொடர்பில் உயர் நீதிமன்றம் தானே தலையிட்டு, இந்த உத்தரவுகளை வழங்கி இருக்கின்றது. இந்த உத்தரவு றாகிங் கொடூரத்தை தடுக்கத் தவறிய அதிகார வர்க்கத்திற்கு உயர்நீதிமன்றம் பகிரங்கமாக வைத்த ஒரு குட்டு என்றே கருத வேண்டும்.



# தேசபந்து விசாரணை அறிக்கை அடுத்த வாரம் சபாநாயகரிடம்

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அடுத்த வாரம் சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது.

அறிக்கையை தயாரிக்கும் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசபந்து தென்னகோனினால் முன்னெடுக்கப்பட்டதாக சட்டவிரோத செயற்பாடுகள் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு அண்மையில் சாட்சி விசாரணைகளை நிறைவுசெய்தது.

உயர்நீதிமன்ற நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன குறித்த குழுவின் தலைவராக செயற்படுவதுடன் லஞ்ச ஊழல் விசாரணைக் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் நீல் இத்தவல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ஈ.டபிள்யூ. எம் லலித் ஏக்கநாயக்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர்.



# மருந்து விலையில் மோசடி தொடர்பில் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு விசாரணை

மருந்து விற்பனையில் ஏற்பட்டுள்ள சந்தேகத்துக்கிடமான முறைகேடுகளை விசாரிக்க, லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் உள்ள சீன – இலங்கை நட்புறவு தேசிய சிறுநீரக வைத்தியசாலைக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சில மருந்து விநியோகஸ்தர்கள், சந்தை விலையைவிட நான்கு முதல் ஐந்து மடங்கு அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த அதிக விலை நிர்ணயம், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் இலாப வரம்பையும் மீறுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மருத்துவர்கள், வழமையான முறையில் வெளி நிறுவனங்களில் இருந்து மருந்துகள் மற்றும் அறுவை உபகரணங்களை பரிந்துரைக்கத் தகுதியுடையவர்கள் என அவர் கூறினார்.

இருப்பினும், சமீபத்திய ஊழல் சந்தேகம், குறிப்பிட்ட ஒரு மருந்து சந்தை மதிப்பை விட பல மடங்கு அதிகமாக விலை நிர்ணயிக்கப்பட்டிருந்த காரணத்தால் உருவாயிருந்தது.

அவசர கொள்முதல், உரிய சட்ட விதிகளின் கீழ் அனுமதிக்கப்பட்டதாக இருக்கலாம்.

எனினும், சந்தையை விட பல மடங்கு அதிக விலைக்கு மருந்துகள் விற்கப்படும்போது, அது சுரண்டலாகும் எனவும் அதுவே விசாரணைக்கு வழிவகுப்பதாகவும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.



# கிவுலகல்லவில் கார் – பஸ் மோதி விபத்து

(உடப்பு-க.மகாதேவன்)

குருநாகல் – நீர்கொழும்பு வீதி கிவுலகல்ல பிரதேச பகுதியில் நேற்றுப் பகல் சிறிய மோட்டார் கார் ஒன்று தனியாருக்குச் சொந்தமான பஸ் ஒன்றுடன் நேருக்கு நேராக மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

காரில் பயணம் செய்த சிறிய குழந்தை உட்பட பல பேர் படுகாயமேற்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.










# போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி வெளிநாட்டுக்கு சென்ற பெண் கைது

போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயற்சித்த பெண் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் மேற்படி பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து போலியாக தயாரிக்கப்பட்ட குடிவரவு, குடியல்வு திணைக்களத்தின் முத்திரையிடப்பட்ட போலி விசாவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



# விமான நிலையங்களை அண்மித்து பட்டம் விட தடை

நாட்டின் சர்வதேச விமான நிலையங்களை அண்மித்து பட்டம் விடுவதை தவிர்க்குமாறு விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் பொதுமக்களிடம் கோரியுள்ளது.

நாளாந்தம் சர்வதேச விமான போக்குவரத்து முன்னெடுக்கப்படும் விமான நிலையங்களை அண்மித்த 05 கிலோ மீற்றருக்குட்பட்ட பகுதிகளில் 300 அடிக்கு மேலாக பட்டம் விடுவது கடுமையான ஆபத்தை ஏற்படுத்தலாம் என நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனை கவனத்திற் கொள்ளாமல் செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், பலாலி சர்வதேச விமான நிலையம், மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம், மத்தள சர்வதேச விமான நிலையம் மற்றும் இரத்மலானை சர்வதேச விமான நிலையத்தை அண்மித்த பகுதிகளில் பட்டம் விடுவது தடை செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய முகாமைத்துவ பிரிவின் பிரதானி அருண ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

# நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வு



மத்திய மலைநாட்டில் நிலவும் மழையுடனான வானிலையைத் தொடர்ந்து நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, விமலசுரேந்திர நீர்த்தேக்கம் நேற்று காலை முதல் நிரம்பி வழிவதாக அதற்குப் பொறுப்பான பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாகொல்ல நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நீர்த்தேக்கங்களை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வசிப்பவர்கள் வெள்ளம் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# மயிலிட்டி அருள்மிகு பேச்சியம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம்

மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலயத்தின் நான்காவது வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் வெகு சிறப்பான முறையில் ஆரம்பமாகியுள்ளது.

வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று காலை 9.30 மணிக்கு சுபமுகூர்த்த வேளையில் கொடியேற்றம் இடம்பெற்றுள்ளது. இதன்போது உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெருமளவான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ந்து 11 தினங்கள் மகோற்சவம் இடம்பெற்று விசேட திருவிழாக்கள் இரண்டு நாள்களும் சேர்த்து 13 நாள்கள் திருவிழா இடம்பெற உள்ளது.

அந்தவகையில், மகோற்சவத்தின் 8ஆம் நாள் வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், சனிக்கிழமை சப்பை ரத திருவிழாவும், 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 ஆம் நாள் திருவிழாவாக தேர்த்திருவிழா இடம்பெற்று 28 ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திர தீர்த்தம் இடம்பெற்று அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு கொடி இறக்கம் இடம்பெற உள்ளது.

பிராயச்சித்த பூசை வழிபாடுகள் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்று பி.பகல் பூங்காவனத் திருவிழாவை தொடர்ந்து தெப்பத்திருவிழாவும் இடம்பெற உள்ளன. தொடர்ந்து 30 ஆம் திகதி புதன்கிழமை காலை வைரவர் அபிசேகம் இடம்பெற்று பிற்பகல் வைரவர் பெங்கல் இடம்பெற உள்ளது.

















# அநுர ஆட்சியின் தேனிலவு?



புருஜோத்தமன் தங்கமயில்

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களைக் கடந்து விட்டது.

முதலாவது இடதுசாரிய(?) ஜனாதிபதி, இடதுசாரிக் கட்சி தனித்து அமைத்திருக்கின்ற அரசாங்கம் என்று இலங்கை அரசியல் ஆட்சி வரலாற்றில், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி புதிய அடையாளங்களைக் கொண்டது.

சுதந்திர இலங்கையை பௌத்த சிங்களப் பேரினவாதக் கட்சிகளே ஆட்சி புரிந்திருக்கின்றன. அவற்றின் கூறுகளாகக் கடந்த காலத்தின் இடதுசாரி



இயக்கங்களும் கட்சிகளும் இருந்திருக்கின்றன. அதிக தருணங்களில் தங்களின் இடதுசாரிய அடையாளங்களை மறந்து பேரினவாதக் கட்சிகளாகவே அவை இயங்கி, கரைந்தும் போயிருக்கின்றன.

ஆனால், தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியை மக்கள் விடுதலை முன்னணியின்(ஜே.வி.பி) தளர்ந்து விடாத போராட்ட குணமும், கொரோனா காலத்தில் வெளிப்பட்ட பொருளாதார நெருக்கடியும், ராஜபக்ஷக்களுக்கு எதிராக எழுந்த "அறகலய"வும் தீர்மானித்தன. அறகலயவுக்கு முதல் தேசிய மக்கள் சக்தி உருவாகிவிட்டாலும், அது இன்று ஆட்சியில் அமர்ந்திருப்பது, அறகலயவின் குழந்தையாகவே. அறகலயவுக்குள் ஜே.வி.பி துணை அமைப்புக்களின் பங்களிப்பு கணிசமானது. ஆனால், அறகலயவின் "தாய்" ஜே.வி.பி அல்ல. அறகலயவின் தோற்றுவாயைத் தேடினால், அது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல வேர்களைக் காட்டும். ஆனால், அதன் அறுவடையை அனுபவித்துக் கொண்டிருப்பது ஜே.வி.பி.யும், அதன் ஜனநாயக முகமுமான தேசிய மக்கள் சக்தியுமாகும்.

வழக்கமாக ஒரு புதிய ஆட்சி அமையும் போது, அந்த ஆட்சியின் "தேனிலவு காலம்" என்பது தேர்தல் கால வாக்குறுதிகளில் பிரதானமானவற்றை உடனடியான நடைமுறைப்படுத்துவது, மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வு காண்பது, உதாரணமாக அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைப்பு, பொதுச் சேவைகளை ஒழுங்குபடுத்தல் என்பவற்றினால் நிறையும். நாட்டு மக்களும் தங்களின் ஆணைக்கு ஆட்சியாளர்கள் மதிப்பளித்திருக்கிறார்கள் என்கிற சிறு ஆறுதலைப் பெறுவார்கள். அது, தற்காலிகமானது என்று தெரிந்தாலும் தங்களின் ஆணைக்கு அரசாங்கம் மதிப்பளிக்கின்றது என்கிற சின்ன நப்பாசை. ஆனால், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக் காலத்தில் தேனிலவுக் காலத்தில்கூட சொல்லிக் கொள்ளும் அளவுக்கான ஆறுதலைக் கூட மக்கள் பெற்றுக் கொள்ளவில்லை. தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள், "குறுங்காலத் தீர்வுகள் அல்ல நீண்ட பயணமும் அதனை அர்த்தப்படுத்தும் தீர்வுகளுமே தங்களின் இலக்கு, ஆகவே அதனை நோக்கிய பயணத்தில் அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது" என்று சொல்லிக் கொள்ள முயற்சிக்கலாம்.

ஆனால், கடந்த காலங்களில் எதிர்க்கட்சியாக நின்று ஜே.வி.பியும், தேசிய மக்கள் சக்தியும் முழங்கிய விடயங்களில் ஆறு மாதங்களுக்குள் செய்யக்கூடிய பல விடயங்கள் உண்டு. அவற்றைச் செய்வதற்கான முயற்சிகளை எடுப்பதற்கான எந்த நகர்வுகளையும் புதிய அரசாங்கம் செய்யவில்லை என்பதுதான், ஆட்சியின் மீதான முதல் விமர்சனமாக எழுகின்றது.

தொடர்ச்சி▼





# அநுர ஆட்சியின் தேனிலவு?

தொடர்ச்சி▲

கடந்த காலத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினை முற்றாக நீக்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது. அந்தக் கோரிக்கைக்குப் பின்னால், அந்தக் கட்சி கடந்த காலத்தில் பயங்கரவாத் தடுப்புச் சட்டத்தினால் சந்தித்த நெருக்கடிகள், எதிர்கொண்ட வன்முறைகள் என்பன பெரும் அனுபவமாக இருக்கின்றன. ஜே.வி.பி.யின் நிறுவனத் தலைவர் ரோஹண விஜயவீர தொடங்கி, அந்தக் கட்சியின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழாக வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள். மனித உரிமைகளைக் கேள்விக்குள்ளாக்கும் காட்டாட்சி தத்துவத்தின் கூறாகவே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினைப் பார்க்க வேண்டியிருக்கும். ஏனெனில், அந்தச் சட்டம் தேசியப் பாதுகாப்பு விடயங்களைக் கருத்தில் கொண்டு அறிமுகப் படுத்தப்பட்டாலும், அது பெருமளவில் புரிந்தது என்னவோ மனித உரிமைகள் பறிப்பையும் அடக்குமுறையையும்தான். அப்படியான கட்டத்தில், அந்தக் சட்டத்தின் நீக்கம் என்பது அவசியமானது. கடந்த காலங்களில் அநுரகுமார திஸநாயக்க தொடங்கி தேசிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்கள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினை முற்றாக நீக்க வேண்டும் என்றே வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அதுவும், நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசமைப்பு முயற்சிகளின் போதும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பிலான முன்னெடுப்பின் போதும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நாட்டுக்கு அவசியமற்றது என்று அவர்கள் முழங்கியிருக்கிறார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் காலத்திலும் அதனை அவர்கள் வாக்குறுதிகளாக வழங்கியிருக்கிறார்கள். ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர், அந்தக் சட்டத்தினை நீக்குவது தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை. மாறாக, பலரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள். பாதுகாப்பு அமைச்சர் என்கிற ரீதியில், அந்தக் கைதுகள், தடுப்புக்காவலுக்காக அநுர கையெழுத்திடுகிறார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினால் சரியான நீதிமன்ற நடவடிக்கைகள் விசாரணைகள் இன்றி பல நூறுக்கணக்கானோர் பத்து, இருபது வருடங்களாக சிறைகளில் இருந்திருக்கிறார்கள். அப்படி சிறையில் இருந்து மரணித்தவர்கள் பலர். இப்போதும், அப்படி பலரும் சிறையில் வாடுகிறார்கள். ஆனால், அநுரவோ, தேசிய மக்கள் சக்தி அரசாங்கமோ பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பில் பேசுகிறார்களே இல்லை. மாறாக, ஆட்சிக்கு வந்தவுடன் கடந்த காலக் கொடுங்கோலர்கள் மாதிரி, அந்தச் சட்டத்தினைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறார்கள்.

இலங்கை ஆட்சி அதிகார வரலாற்றில் மூன்றின் இரண்டு பெரும்பான்மையை தனித்த ஒரு கட்சியாக பெற்றிருக்கின்ற தேசிய மக்கள் சக்தி, தான் நினைப்பதையெல்லாம் நாடாளுமன்றத்துக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்கான வல்லமையைக் கொண்டிருக்கின்றது. சட்டத்திருத்தங்கள் முதல் புதிய அரசமைப்பு வரையில் அந்தக் கட்சி நினைத்த மாத்திரத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கான அதிகார வலுவுடன் இருக்கின்றது. ஆனால், தேசிய மக்கள் சக்தியினர் அவை பற்றியெல்லாம் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக தங்களின் வாக்கு வங்கிச்



சரிவை எப்படிக் கையாள்வது, தென் இலங்கையின் பேரினவாத சக்திகளை எப்படி திருப்திப்படுத்தி நிலைபெறுவது என்று சிந்தித்துச் செயற்படுகிறார்கள். ராஜபக்ஷக்களையும் ரணிலையும் திட்டித் தீர்த்துக் கொண்டு, அவர்களின் பொருளாதார திட்டங்களை விமர்சித்துக் கொண்டு, ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியினர், இன்றைக்கு பயணப்படுவது என்னவோ, கடந்த காலத்தில் ரணில் போட்டு வைத்த பாதையில்தான். ராஜபக்ஷக்களின் பினாமியாக ரணில் ஆட்சி பீடம் ஏறியதும் மக்களின் மீதான வரிச்சுமையையும் பொருளாதார சுமையையும் எந்தவித தயவு தாட்சண்யமும் இன்றி சர்வதேச

தொடர்ச்சி▼



# அநுர ஆட்சியின் தேனிலவு?

தொடர்ச்சி▲

நாணய நிதியத்தின் கட்டுப்பாடுகளின் பேரில் ஏற்றினார். அந்தக் கெடுபிடிகளில் இருந்து சற்றேனும் விடுதலை அளிப்பார்கள் என்று நம்பி தேசிய மக்கள்



சக்தியை மக்கள் ஆட்சிக்கு கொண்டுவந்தார்கள். ஆனால், அவர்களோ ரணிலின் பாதையைத் தொடர்கிறார்கள்.

நாட்டின் இன்னமும் அரிசி, தேங்காய், உப்புத் தட்டுப்பாடு உண்டு. இவற்றுக்கான கள்ளச் சந்தை என்பது திறந்திருக்கின்றது. பதுக்கல் என்பது பெரும் சுமையாக மக்கள் மீது ஏற்றப்படுகின்றது. தேங்காய் தட்டுப்பாட்டுக்கு குரங்குகளின் மீது குற்றம் சாட்டினார்கள். அரிசித் தடுப்பாட்டுக்கு நாய்களுக்கு சோறு வழங்குவதும் காரணம் என்றார்கள், இப்படி தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக் கூடாரம் விடயங்களைக் கையாளத் தெரியாமல் தள்ளாடுகிறது. தேங்காய் தட்டுப்பாட்டிற்கு, தென்னை மரங்களில் பரவிய தொற்று காரணமென்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது. ஆனால், அரசித் தட்டுப்பாட்டினை கள்ளச் சந்தையை கட்டுப்படுத்தினாலே பெரியளவில் சீர் செய்துவிடலாம். இன்னமும் அரசி மாபியாக்களைக் கையாளத் தெரியாமல், புதிய அரசு தடுமாறுகிறது. இன்னொரு பக்கம், உப்புத் தட்டுப்பாடு என்பது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட, உப்பு நீரேரிகள் பலவற்றைக் கொண்டிருக்கின்ற இலங்கையில் ஏற்படுகின்றது என்றால், அது யாரின் தவறு? அது, ஆட்சியாளர்களின் தவறு இல்லையா? அரச உப்பளங்களைச் சரியாக இயங்க வைத்தாலே, ஏற்றுமதி செய்யும் அளவுக்கான உப்பு உற்பத்தியைச் செய்துவிட முடியும். இன்றைக்கு உப்புத் தட்டுப்பாட்டினால், மீனவர்களின் நிலைமை மோசமடைதுள்ளது.

இலங்கையின் அரச இயந்திரம் என்பது தென் இலங்கையின் பாரம்பரிய பேரினவாதக் கட்சிகளினால் தயார் செய்யப்பட்டது. அங்கு உடனடியான மாற்றங்களைச் செய்வது என்பது இலகுவானதல்ல என்பது புரிந்து கொள்ளக் கூடியதே. ஆனால், அதற்கான முயற்சிகளை எடுப்பதற்காகவும் ஊழல் – மோடிகள் அற்ற வினைத்திறனுள்ள அரச இயந்திரத்தை செயற்படுத்துவதற்குமே தேசிய மக்கள் சக்தியை மக்கள் புதிதாக ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள். ஆனால், ஜனாதிபதி அநுரவே கூட அரச இயந்திரத்தினைச் சரிசெய்ய முடியவில்லை என்று ஒப்பாரி வைக்கும் நிலை என்பது, ஆட்சியின் தோல்வியாகவே பார்க்கப்படும். அண்மையில்கூட அரச அதிகாரிகளுடனான சந்திப்பொன்றில் ஜனாதிபதி, ”...கூட்டங்களில் பேசுகிறீர்கள். சொல்வதைச் செய்வதாக கூறுகிறீர்கள். ஆனால், எந்தவித மாற்றமும் நடைபெறவில்லை. பழையபடியே இருக்கிறீர்கள்...” என்று விசனத்துடன் கூறினார். இந்தக் கூற்று அவரின் இயலாமையைக் பிரதிபலிக்கின்றது. ஒப்புக்காக சில அதிரடி நடவடிக்கைகள் மூலம் சில படம் காட்டுதல்கள் காட்டப்படுகின்றன. ஆனால், அரச இயந்திரம் என்பது கிட்டத்தட்ட மல்லாந்து படுத்திருக்கின்ற நிலையே காணப்படுகின்றது. புதிய ஆட்சியாளர்கள் தேனிலவு காலத்தில் செய்கின்ற ஒரு சில மாற்றங்களைக் கூடசெய்ய முடியவில்லை என்கிற போது, இந்த அரசாங்கத்திடம் இருந்து புதிய அரசமைப்பு, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு என்பனவற்றையெல்லாம் எதிர்பார்ப்பது என்பது பெரும் கற்பனைத் திறன் நிரம்பியவர்களினால்தான் முடியும்.



# மு.க.முத்து உடலுக்கு தலைவர்கள் அஞ்சலி



மறைந்த மு.க.முத்துவின் உடலுக்கு தலைவர்கள், பிரபலங்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மூத்த மகன் மு.க.முத்து (வயது 77). கருணாநிதி – பத்மாவதி தம்பதிக்கு பிறந்த அவர், வயது மூப்பின் காரணமாக ஏற்பட்ட உடல்நலக் குறைவால் சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். மருத்துவர்கள் தேவையான சிகிச்சைகளை அளித்து வந்த நிலையில், நேற்று சனிக்கிழமை காலை மு.க.முத்து காலமானார்.

மு.க.முத்துவின் உடல் அஞ்சலிக்காக ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டது. தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேரில் சென்று தனது அண்ணன் மு.க.முத்து உடலுக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினார்.

அதைத் தொடர்ந்து, மு.க.முத்து உடல் அஞ்சலிக்காக கருணாநிதி வாழ்ந்த கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டது. அங்கு வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் மு.க.முத்துவின் உடலை பார்த்து கண்கள் கலங்கியபடி நின்றிருந்தார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மக்களவை உறுப்பினர் கனிமொழி மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர். மு.க.முத்துவின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி, தனது அண்ணன் உடலை பார்த்து கதறி அழுதார்.

# என் வளர்ச்சியை தன் வளர்ச்சியாக கருதி என்னை ஊக்கப்படுத்தியவர் மு.க. முத்து

## முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்





என் ஆருயிர் அண்ணனுக்கு அன்பு உணர்வுடன் எனது அஞ்சலியை நான் செலுத்துகிறேன் என முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்து உள்ளார்.

மு.க. முத்துவின் மறைவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்து அறிக்கை வெளியிட்டு உள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“முத்தமிழறிஞர் கலைஞர் குடும்பத்தின் மூத்த பிள்ளை, என்னுயிர் அண்ணன் மு.க. முத்து மறைவுற்றார் என்ற செய்தி என்னை இடியென தாக்கியது. தாய் – தந்தையர்க்கு இணையாக என் மீது பாசம் காட்டிய அன்பு அண்ணனை இழந்து விட்டேன் என்ற துயரம் என்னை வதைக்கிறது.

தந்தை முத்துவேலர் நினைவாக அண்ணனுக்கு மு.க. முத்து என்று பெயர் சூட்டினார் தலைவர் கலைஞர். தலைவர் கலைஞரை போலவே இளமைக்காலம் முதல் நாடகங்களின் மூலமாக திராவிட இயக்கத்துக்கு தொண்டாற்ற தொடங்கியவர் அண்ணன் முத்து.

நடிப்பிலும், வசன உச்சரிப்பிலும், உடல் மொழியிலும் தனக்கென தனிப் பாணியை வைத்திருந்தார். அத்தகைய ஆற்றல், ஆர்வம் காரணமாக திரைத் துறையில் 1970 ஆம் ஆண்டில் நுழைந்தார். அறிமுகமான முதல் திரைப்படத்திலேயே இரட்டை வேடத்தில் நடித்தார்.

பிள்ளையோ பிள்ளை, பூக்காரி, சமையல்காரன், அணையா விளக்கு ஆகிய படங்களின் மூலமாக தமிழ்நாட்டு ரசிகர் மனதில் நிரந்தரமாக குடியேறினார் அண்ணன் மு.க. முத்து.

பல நடிகர்களுக்கு வாய்க்காத சிறப்பு அவருக்கு இருந்தது. தனது சொந்த குரலில் பாடல்களை இனிமையாக பாடும் திறனை பெற்றிருந்தார். ‘நல்ல மனதில் குடியிருக்கும் நாகூர் ஆண்டவா’ என்ற பாடலும், ‘சொந்தக்காரங்க எனக்கு ரொம்ப பேருங்க’ என்ற பாடலும் பலராலும் இன்றும் மறக்க முடியாத பாடல் ஆகும்.

என் மீது எப்போதும் பாசத்துடன் இருந்து, எனது வளர்ச்சியை தன் வளர்ச்சியாக கருதி, எப்போதும் என்னை ஊக்கப்படுத்தி வந்தவர் அவர். எப்போது அவரை பார்க்க சென்றாலும், பாசத்துடன் பழைய நினைவுகளை பகிர்ந்து கொள்வதை வழக்கமாக வைத்திருந்தார். வயது மூப்பின் காரணமாக அவர் மறைவுற்றாலும் அன்பால் எங்கள் மனதிலும், கலையாலும், பாடல்களாலும் மக்கள் மனதிலும் என்றும் வாழ்வார் அண்ணன் மு.க.முத்து. என் ஆருயிர் அண்ணனுக்கு அன்பு உணர்வுடன் எனது அஞ்சலியை நான் செலுத்துகிறேன். ” என்று குறிப்பிட்டுள்ளார்.

## பாலியல் குறியீட்டு கடித விவகாரம்:

# 10 பில்லியன் டொலர் நட்டஈடு கோரி டொனால்ட் ட்ரம்ப் வழக்குத் தாக்கல்




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் செய்தித் தாள், அதன் உரிமையாளர் ரூபர்ட் மெர்டொக் உள்ளிட்ட பலரை எதிர்த்து 10 பில்லியன் அமெரிக்க டொலருக்கான அவதூறு வழக்கொன்றை மியாமி கூட்டாட்சி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு, நிதியாளரும் பாலியல் குற்றவாளியுமான எப்ஸ்டீனின் பிறந்த நாளுக்காக 2003 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட ஒரு வாழ்த்து கடிதத்தில் டொனால்ட் ட்ரம்பின் பெயர் உள்ளது என அந்த செய்தித் தாள், செய்தி வெளியிட்டதையடுத்து தாக்கல் செய்யப்பட்டது.

டிரம்பின் அந்த கடிதத்தில் பாலியல் ரீதியான குறியீடுகளும், இருவரும் பகிர்ந்த இரகசியங்களை குறிப்பிடும் அம்சங்களும் உள்ளதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அந்த செய்தி பொய்யானது என மறுத்துள்ள டொனால்ட் ட்ரம்ப், இது தமக்கு அவப்பெயரை உண்டாக்கும் முயற்சி எனவும் கண்டித்துள்ளார்.

இந்தநிலையில், ரூபர்ட் மெர்டொக்கையும் மற்றைய செய்தியாளர்களையும் கடுமையாக விமர்சித்த டொனால்ட் ட்ரம்ப், இதற்கான சட்ட நடவடிக்கைகள் குறித்து முன்னதாகவே எச்சரித்திருந்தார்.

எவ்வாறாயினும், வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் நிறுவனம், தங்களது செய்தி முழுமையாக உண்மையானதும் நம்பகமானதுமாகும் என வலியுறுத்தி, இந்த வழக்கைத் தைரியமாக எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிதியாளரும் பாலியல் குற்றவாளியுமான எப்ஸ்டீன், 2019 ஆம் ஆண்டு நியூயோர்க் சிறைச்சாலையில் இருந்தபோது, உயிரை மாய்த்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# போர் காரணமாக உக்ரைனில் குற்றச் சம்பவங்கள் அதிகரிப்பு

## ஐ.நா. தகவல்



உக்ரைனில் மூன்றரை ஆண்டுகளாக நடந்து வரும் போர் காரணமாக உள்நாட்டில் போதைப் பொருள் கடத்தல், ஆயுதங்கள் கடத்தல், மனிதர்களை கடத்துதல், பொருளாதார குற்றங்கள் உள்ளிட்ட குற்றச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என ஐ.நா. தெரிவித்துள்ளது.

ரஷ்யா தொடுத்த போர் தொடங்கி மூன்றரை ஆண்டுகள் ஆகி உள்ள நிலையில், உக்ரைனில் நிகழும் குற்றங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக ஐ.நா போதைப்பொருள் மற்றும் குற்றப் பதிவு அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. போதைப் பொருள் கடத்தல் மற்றும் உற்பத்தி, ஆன்லைன் மோசடிகள், ஆயுதக் கடத்தல், பொருளாதாரக் குற்றங்கள், ஆட்கடத்தல், சட்டவிரோத வெளியேற்றம் ஆகிய 6 அம்சங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு ஐ.நா இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையின் மேலும் குறிப்பிடுகையில்,

"உக்ரைன் மக்களுக்கு போர் சொல்லொணாத் துயரத்தை ஏற்படுத்தி உள்ளது. அதோடு, திட்டமிட்ட முறையில் நடக்கும் குற்றங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. போருக்குப் பிந்தைய மறுகட்டமைப்புக்கான பயணத்தில் இது ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும்.

2022 முதல் உக்ரைனில் இருந்து கொகைன், ஹெராயின் போதைப் பொருள்கள் கடத்துவது வெகுவாகக் குறைந்துள்ளது. அதேநேரத்தில், கேத்தினோன்ஸ், மெதடோன் போன்ற சிந்தடிக் போதைப் பொருள்களின் கடத்தல் மற்றும் உற்பத்தி அதிகரித்துள்ளது. மெதடோனைப் பொறுத்தவரை உற்பத்தியில் பெரும்பகுதி உள்நாட்டிலேயே கடத்தப்படுகிறது. ஏனெனில், உள்நாட்டில் போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

போர் காரணமாக உள்நாட்டில் ஆயுதங்கள் கிடைப்பது எளிதாகியுள்ளது. போர்க் களத்தில் உள்ள உபரி ஆயுதங்கள் பொதுமக்களைச் சென்றடைவதால் வன்முறை அதிகரிப்பதற்கு அது வழிவகுக்கிறது. உக்ரைனில் இருந்து வெளிநாடுகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவது தொடர்பாக ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றபோதிலும், அது குறித்து கண்காணிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

போர் காரணமாக உக்ரைனில் இருந்து 1.4 கோடி மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். அவ்வாறு இடம்பெயர்பவர்களுக்கு மனிதாபிமான ரீதியில் உதவுவதாகக் கூறி சில குழுக்கள், அவர்களைக் கடத்தி கட்டாய உழைப்பை சுரண்டுகின்றன. நாட்டின் கிழக்கு மற்றும் வடகிழக்கு எல்லைகள் மூடப்பட்டுள்ளதால் வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கடத்துவது குறைந்துள்ளது. எனினும், உள்நாட்டிலேயே மனிதர்கள் கடத்தப்படுவதும் அவர்களை கட்டாய பணிகளில் சேர்ப்பதும் அதிகரித்துள்ளது." என்று ஐ.நா தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -20.07.2025

## மேஷம்

இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் வளர்ச்சி நோக்கி முன்னேறுவீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களைப் பெறுவீர்கள்.

பணியில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். நீங்கள் கூடுதல் முயற்சி செய்து சிறந்த செயல்திறனை அளிப்பீர்கள். உங்களின் சிறந்த தவகல் தொடர்பு திறமை மூலம் பல நன்மைகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் திருப்தி காணப்படும். அவருடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

தொழில் செய்பவர்கள் நற்பலன் காணும் அதிர்ஷ்டமான நேரம். புதிய தொழில் தொடர்புகள் பெறலாம். அதன் மூலம் அதிக பணம் பெற இயலும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## ரிஷபம்

இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் இலக்குகளை அடைய மிகவும் பொறுமை வேண்டும். நம்பிக்கையுடன் இருந்தால் நல்ல வளர்ச்சி காணலாம்.

உங்கள் முன் இருக்கும் சவாலான பணிகளை முடிக்க கடினமாக உழைக்க வேண்டும். திட்டமிட்டு பணிபுரிவதன் மூலம் உங்கள் பணிகளை திறமையாக முடிக்கலாம்.

உங்கள்துணையுடன்அன்பைபகிர்ந்துகொள்வதற்குசாதகமான நாள் அல்ல. சுமூகமான உறவு அமைய நீங்கள் அனுசரித்து நன்கு புரிந்துணர்வுடன் நடத்தல் வேண்டும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

## மிதுனம்

இன்று நல்ல பலன்கள் காண்பதற்கு சாதகமான நாள் அல்ல. இன்று நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். கடுமையான சூழ்நிலையை புத்திசாலித்தனமாக கையாள வேண்டும். சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும் செயல்களில் அமைதி காண வேண்டும்.

உங்கள் பணிகளில் தவறுகள் நேரலாம். அதிக கவனம் செலுத்துவதன் மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றலாம்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று ஏற்படும் தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும்.

பண இழப்பு காணப்படுகின்றது. உங்கள் நிதிநிலையைக் கையாளும்போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

பதற்றம் மற்றும் பாதிகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். பிரார்தனை மற்றும் இறை வழிபாடு நல்ல பலனளிக்கும்.

## கடகம்

இன்று ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்கும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் நண்பர்களின் ஆதரவும் அதன் மூலம் நன்மையும் பெறுவீர்கள்.

உங்கள்செயல்திறனில்சிறந்தவளர்ச்சி காணப்படும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். பொதுவாக திருப்தியான நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் முன் மகிழ்ச்சியான வாழக்கை உள்ளதாக நினைத்து மகிழ்வீர்கள். புதிய மனிதர்களின் சந்திப்பு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். கையிலுள்ள உபரிப் பணத்தைக் கொண்டு நீங்கள் பயனுள்ள சொத்தை வாங்குவீர்கள்.

நீங்கள் சிறந்த தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். இன்று உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

## சிம்மம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. பதட்ட உணர்வு காணப்படும். பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இந்த உணர்வுகளை நீங்கள் சமாளிக்க வேண்டும்.நல்ல பலன் காண நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் நம்பிக்கையுடனும் மன உறுதியுடனும் செயலாற்ற வேண்டியது அவசியம். இதன் மூலம் எதிர்கொள்ளும் தடைகளை ஜெயிக்க முடியும்.

கருத்து வேறுபாடு காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் துணையின் கருத்துக்களை புரிந்து கொண்டு இருவரும் பரஸ்பரம் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

பண வரவுக்கு இன்று சாத்தியமில்லை. கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. வயிற்று உப்பசம் ஏற்பட வாய்ப்புள்ளது.

## கன்னி

இன்று நீங்கள் உற்சாகமான ஆற்றலுடன் காணப்படுவீர்கள். நீங்கள் குறைந்த எதிர்பார்ப்புடன் கடினமாக உழைப்பீர்கள். இதனால் நற்பலன்கள் ஏற்படும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் அமைதியாக இருக்க முடியும்.

இன்று பணியில் மந்தத் தன்மை காணப்படும். உங்கள் செயல்களைக் கையாளும்போது பொறுமை இழப்பீர்கள். கவனமுடன் இருந்தால் சிறப்பாக செயலாற்ற இயலும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் அதிருப்தி காணப்படும். இருவரும் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியம்.

உங்கள் வீட்டின் புனரமைப்புக்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் செலவுகள் அதிகமாகும். உங்களின் நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இன்று பதட்டம் காரணமாக உங்கள் தொடைகளில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## துலாம்

இன்று பலன்கள் கலந்து காணப்படும். அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். இன்றைய செயல்களைக் கையாள நீங்கள் பொறுமையாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டியதுஅவசியம்.உங்கள்இலக்குகளை அடைய கடினமாக உழைக்க வேண்டும். அது உங்கள் சுய முயற்சியை சார்ந்துள்ளது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நற்பலன்களை அடைய உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைக்க வேண்டியது முக்கியம்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நல்ல புரிந்துணர்வு ஏற்பட இந்தப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் இன்று குறைந்து காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது. இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது.

இன்று தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று நீங்கள் சிறிது பதற்றத்துடன் காணப்படுவீர்கள்.

## விருச்சிகம்

இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை அடைய புத்திசாலித்தனமாக முயல்வீர்கள். இது உங்களின் வளர்ச்சிக்கு உதவும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். நீங்கள் தரமான வகையில் பணிகளை முடித்துத் தருவீர்கள். இதனால் உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு மேம்படும்.

இன்று பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். கையில் உபரிப் பணம் காணப்பட்டு மகிழ்ச்சியாக இருப்பீர்கள். ஆன்மீக காரியங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -20.07.2025




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். இசை கேட்பது அல்லது திரைப்படம் பார்த்தல் போன்ற நிகழ்சிகளின் மூலம் நீங்கள் இன்றைய நாளை சிறப்பக கையாண்டு மகிழ்ச்சியாக இருக்கலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். எனவே உங்கள் பணியில் தாமதங்கள் காணப்படும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். இரவரும் எதிரெதிர் கருத்து கொண்டிருப்பீர்கள். இதனால் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும். அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு குறைவாக இருக்கும்.

இன்று எந்த விதமான ஆரோக்கியப் பிரச்சினையும் இருக்காது. உங்கள் உடன் பிறந்தவர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று உணர்ச்சி வசப்படுவதை விட யதார்த்தமாக இருப்பதற்கான சூழ்நிலை காணப்படும். இன்றைய சவால்களை சந்திக்க நீங்கள் அமைதியாக நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் நீங்கள் மன அமைதி பெறலாம்.

உங்கள் செயல்திறனை மேம்படுத்த நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பணியில் தவறுகளை தவிர்க்க வேண்டும். சக பணியார்களிடமிருந்து தொல்லைகளை எதிர் கொள்ள நேரும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். எனவே செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.

இன்று ஒவ்வாமை ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சளி அல்லது காய்ச்சல் ஏற்படலாம்.




இன்று நீங்கள் பிறருடன் பழகும் போது கவனமாகப் பழக வேண்டும். சிறிதளவு பரிச்சயமானவர்களிடம் இன்று தவறான புரிந்துணர்வு ஏற்படும். தேவையற்ற விளைவுகளை தவிர்க்க நீங்கள் உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. நல்ல பலன்களைக் காண நீங்கள் முறையாக திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையேயான உறவுமுறை பாதிக்கும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டு மனம் திறந்து பேசுவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். அதிக பணம் சம்பாதிப்பதும் குறைவாக இருக்கும்.

உடற்பயிற்சி மூலம் திடமாக இருக்கலாம். பிரார்தனை மற்றும் மன அமைதி உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.




இன்று வளர்ச்சி காண்பதற்கு மிகவும் உகந்த நாள். இன்று வாழ்க்கையின் உண்மைகளை அறிந்து கொள்வதற்கான நேரம். இது மகிழ்ச்சி தரும் கற்றல் அனுபவமாக இருக்கும்.

பணியில் சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் அனைத்துப் பணிகளிலும் திருப்தி காண்பீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

இன்று அதிகப் பணம் காணப்படும். கையிலுள்ள பணத்தை பயனுள்ள நோக்கங்களுக்காக செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.

எந்தக் காலத்திலும்.. எந்த வடிவத்திலும்
உங்களோடு நாங்கள்...

செந்தியின்
தமிழன்
வழிகாட்டி
Tamils' Guide
Since 1996
416-615-4646 info@tamilsguide.com
www.tamilsguide.com